
பக்கங்கள் 14+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 20556 | தை 16 செவ்வாய்க்கிழமை 28.01.2025 | அதிர்வு 180

## நாமலுக்கு எதிராக குற்றப் பத்திரிகை



சர்ச்சைக்குரிய க்ரிஷ் திட்டம் தொடர்பாக ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் 03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# தமிழரசின் மூத்த தலைவர் அவசர சிகிச்சைப் பிரிவில்



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் அரசியல் குழுத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இன்று காலை அவர் தனது வீட்டில் தவறி வீழ்ந்த நிலையில் தலையில் நரம்பு வெடித்து இரத்தம் கசிந்துள்ளது என்றும், வைத்தியசாலையில் அவருக்குச் செயற்கைச் சுவாசம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

# துப்பாக்கியால் சுட்டு இந்திய மீனவர்களை கைது செய்த கடற்படை

## இருவர் காயங்களுடன் யாழ். வைத்தியசாலையில்






(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 13 இந்திய மீனவர்கள் இன்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்துள்ளனர்.

பாண்டிச்சேரியைச் சேர்ந்த 13 இந்திய மீனவர்கள் ஒரு படகில் யாழ்ப்பாணம் கடற்பரப்புக்குள் ஊடுருவி மீன்பிடியில் ஈடுபட்ட சமயமே கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது நடவடிக்கையின்போது கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு இந்திய மீனவர்கள் காயமடைந்தனர். இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

எஞ்சிய 11 இந்திய மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். 03

# காதலியின் கத்திக்குத்து தாக்குதலில் நாவலப்பிட்டி காதலன் பரிதாபப் பலி!

புதிய வேலைக்கான நேர்காணல் தொடர்பான வாக்குவாதத்தின்போது காதலனின் மார்பில் காதலி கத்தியால் குத்தியதில் பலத்த காயமடைந்த காதலன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார் என்று வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சுஜித் பிரதீப் குமார (வயது 31) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இறந்தவர் திருமணமானவர், ஒரு குழந்தையின் தந்தை என்றும், அவரது மனைவி வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார் என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



இறந்தவர், சந்தேகநபரான அந்தப் பெண்ணுடன் காதல் உறவில் இருந்தார் என்றும், அந்தப் பெண், வெல்லவாய, கொட்டவெஹெர பகுதியில் வாடகைக்கு விடுதி ஒன்றில் தங்கியிருந்தார் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் நடத்திய விசாரணையில், இறந்தவர் தனது காதலியின் விடுதி அறைக்குப் பலமுறை சென்றிருப்பதும், சம்பவம் நடந்த நாளில், விடுதி அறைக்குச் சென்றபோது, அவரது காதலி புதிய வேலைக்கான நேர்காணலுக்குச் செல்லப்போவதாகக் கூறியதும் தெரியவந்தது.




# மஹிந்த – மொட்டு உறுப்பினர்கள் சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட சந்திப்பு நடைபெற்றது.

கொழும்பு, விஜேராம வீதியிலுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சிலிண்டர் சின்னத்தில் கடந்த பொதுத்தேர்தலில் தேர்தலில் போட்டியிட்ட சிலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, தற்போது மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கான சதிகள் இடம்பெறுகின்றன என்று தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் மேலும் பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன என்றும் பிரேலால் ஜயசேகர மேலும் கூறினார்.

# குளவிக்கொட்டுக்கு இலக்காகி பாடசாலை மாணவன் மரணம்!

குளவிக்கொட்டுக்கு இலக்காகி பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புசல்லாவை, பிளக்பொரஸ்ட் தோட்டத்தில் நேற்று பாடசாலைக்குச் சென்று பெற்றோருடன் வீடு திரும்பிய மாணவர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

அந்த மாணவர்கள் கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், தரம் 4 இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவர் சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை புசல்லாவை மற்றும் கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தகப் பூச்சிகளாக இருப்பதால் எமது அறிவு விருத்தியடையாது!

## நாட்டு நடப்புக்களை அறிந்துகொள்ள பத்திரிகைகளை வாசிக்க வேண்டும் என்று வடக்கு ஆளுநர் அறிவுறுத்து

“புத்தகப் பூச்சிகளாக இருப்பதால் எமது அறிவு விருத்தியடையாது. நாட்டு நடப்புக்களையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். பத்திரிகைகளைப் படிக்க வேண்டும். எமது பாடப் புத்தகங்களுக்கு மேலதிகமாக படிக்கும் ஒவ்வொரு விடயங்களும் எமது அறிவை விருத்தி செய்யும். இன்றைய இளைய சமூகத்தை அதனை நோக்கித் தள்ளவேண்டும்”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வும், “பச்சிலை“ மலர் வெளியீடும், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை பிரதேச சபையின் செயலர் திருமதி த. தர்சினி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்ற ஆளுநர், நிகழ்வுகளில் பங்குபற்றியோருக்கான பரிசில்களை வழங்கி வைத்ததுடன், “பச்சிலை“ நூலையும் வெளியிட்டு வைத்தார்.

தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையாற்றிய ஆளுநர்,

“அரசாங்க அதிகாரிகள் மக்களுக்கு சேவை செய்கின்றோம் என்பதை மறந்து செயற்படுகின்றனர். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அரச சேவையில் மக்கள் நம்பிக்கை வைக்கும்படி செயற்படவேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றார். ஆனால், சில அரசாங்க திணைக்களத்தின் அதிகாரிகளை நினைத்து வெட்கப்படுகின்றேன்.

பொதுமக்கள் தினத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பொதுமகன் என்னை வந்து சந்தித்தார். அவர் தனது கடிதத்தில் வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒரு பிரதேச செயலருக்கு முகவரியிட்டிருந்தார். உண்மையில், பிரதேச செயலர் ஊடாகத்தான் ஆளுநருக்கு வரவேண்டும். அவ்வாறு ஏன் செய்துள்ளீர்கள் என்று கேட்டபோது, நீங்கள் சொன்னால்தான் அவர்கள் செய்வார்கள். அதனால்தான் அப்படி எழுதியிருக்கின்றேன் என அந்தப் பொதுமகன் பதிலளித்தார். இது வேதனையானது. பொதுமக்களை அவ்வாறு எண்ணும் அளவுக்கு எங்கள் அதிகாரிகளின் செயற்பாடுகள் இருந்திருக்கின்றன. அதிகாரிகள் சிலர் இலஞ்சம் பெற்றுப் பழகிவிட்டார்கள். மக்கள் அப்படிப்பட்டவர்களை நம்பவில்லை. அடியோடு வெறுகின்றார்கள். இந்த விடயங்களில் நாங்கள் மாற்றங்களை ஏற்படுத்தாமல் எதையும் செய்ய முடியாது.

பொதுமக்களை காக்க வைப்பதும், அவர்களை அலைக்கழிப்பதும்தான் உயர் அதிகாரிகளின் கதிரைக்கு பெருமை என்று சில அதிகாரிகள் நினைக்கின்றனர். அது தவறு. மக்களுக்கு தேடித் தேடி உதவிகளைச் செய்யவேண்டும். போதுமான பணியாளர்கள் அலுவலகத்தில் இருக்கின்றார்கள். எனவே, அவர்களை உரியமுறையில் நெறிப்படுத்தி மக்களுக்கு தேடிச் சென்று சேவையாற்றச் செய்யவேண்டும்.

நாங்கள் பெற்றுக்கொள்கின்ற சம்பளத்துக்கு பணியாற்றவேண்டும். ஓர் ஏழைக்கு உதவி செய்ய எந்தவொரு சுற்றறிக்கையும் தடையாக இருக்காது. ஓர் ஏழைக்குச் செய்யும் உதவி கடவுளுக்குச் செய்யும் உதவிக்கு நிகரானது. கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்று சொல்வார்கள். ஏழைக்குச் செய்யும் உதவிதான் பலனை எதிர்பாராதது. ஏனையோருக்குச் செய்யும் உதவிகள் பலனை எதிர்பார்த்ததே.

அஸ்வெசும நலன்புரி திட்டத்துக்கு தகுதியான பலரை கடந்த காலத்தில் உள்வாங்கவில்லை. தேவையற்றவர்கள் அதனுள் உள்வாங்கப்பட்டிருக்கின்றார்கள். இது எங்கள் அதிகாரிகளின் தவறு. விளிம்புநிலையில் உள்ள உண்மையில் உதவி தேவைப்பட்ட மக்கள் என்னை தினமும் சந்தித்து கண்ணீர் விட்டு அழுகின்றார்கள். அந்த மக்களுக்கு நாங்கள் உதவி செய்ய வேண்டும். உதவி தேவையானவர்களுக்கே அதனைச் செய்யவேண்டும்.

எமது மாகாணத்தில் வேலை வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் என்றால் முதலீட்டாளர்கள் வரவேண்டும். முதலீட்டாளர்கள் வருவதற்கு தயாராக இருந்தாலும் அவர்களைக் கவரும் விதத்தில் எங்கள் அதிகாரிகளின் செயற்பாடுகள் அமையவேண்டும். முதலீட்டாளர்களை தட்டிக் கழிக்கும் வகையில் அவர்கள் திரும்பிச் செல்லும் வகையில் அதிகாரிகள் செயற்படுவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். முதலீட்டாளர்களை நாங்கள் வருமாறு அழைக்கின்றோம். அப்படி வருகின்ற முதலீட்டாளர்களை எமது மாகாணத்தில் முதலிடுவதற்கு ஏதுவான வாய்ப்புக்களையும் நாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.” – என்றார்.

இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் த.ஜெயசீலன், கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப.சத்தியராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### துப்பாக்கியால்...

யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இந்திய மீனவரான பாபுவின் காலில் இருந்து ஒரு துப்பாக்கிச் சன்னம் அகற்றப்பட்டுள்ளது என்றும், அவர் விரைவில் குணமடையும் தன்மை காணப்படுகின்றது என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டாவது மீனவரான செந்தமிழனின் காலில் பட்ட துப்பாக்கிச் சன்னம் கால் எலும்பை உடைத்துக் கொண்டு வெளியேறியதால் அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக செந்தமிழன் இயல்பு நிலைக்குத் திரும்ப ஒரு சில மாதங்கள் ஏற்படும் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இந்திய மீனவர்களை யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயானந்தமூர்த்தி றஜீவன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

---

### நாமலுக்கு எதிராக...

தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ஷ எம்.பிக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிறுவரைப் பாதுகாப்போம்!

சிறுவர்களுக்கு எதிரான கொடூரங்கள், பாலியல் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக அதிர்ச்சி தரும் புள்ளி விவரங்கள் வெளியாகியிருக்கின்றன.

2023 ஆம் ஆண்டில் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூலை 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 5,456 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது. அவற்றில், சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 1,296 முறைப்பாடுகளும், கடுமையான காயங்கள் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பில் 163 முறைப்பாடுகளும், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக 242 முறைப்பாடுகளும் பெறப்பட்டுள்ளன.

ஆனால் 2024 ஆம் ஆண்டில் சிறுவர்கள் மீதான கடுமையான பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பாக 321 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபை கூறுகின்றது.

வெளிப்படையாக முறைப்பாடுகள் கிடைத்த சம்பவங்கள் தாம் இவை. ஒளிவு மறைவாக - முறைப்பாடளிக்கப்படாமல் - தொடரும் கொடூரங்களின் எண்ணிக்கை மேலும் அதிர்ச்சி தருவதாக இருக்கக் கூடும்.

2024 ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் தொடர்பாக 580 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்தக் காலகட்டத்தில், சிறுவர்கள் தொடர்பாக மொத்தம் 8,746 முறைப்பாடுகள் தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ளன.

இதில் அதிக எண்ணிக்கையானவை - 2,746 முறைப்பாடுகள் - சிறுவர் பாதுகாப்புத் தொடர்பானவை. சிறுவர்கள் மீதான சித்திரவதை தொடர்பாக 1,950 முறைப்பாடுகளும், சிறுவர்கள் யாசகம் பெறுவது தொடர்பாக 229 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

பாலியல் வன்கொடுமை தொடர்பாக 42 முறைப்பாடுகளும், பாலியல் செயல்களுக்கு சிறுவர்களை தூண்டுவது தொடர்பாக 25 முறைப்பாடுகளும், குழந்தை திருமணங்கள் தொடர்பாக 14 முறைப்பாடுகளும், நிர்வாணப் புகைப்படங்களை இணையத்தளத்தில் வெளியிடுவதான மிரட்டல்கள் தொடர்பாக 151 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

2024 ஆம் ஆண்டில் தற்கொலை முயற்சி தொடர்பாக 18 முறைப்பாடுகளும், போதைப்பொருள் பழக்கம் தொடர்பாக 120 முறைப்பாடுகளும், வயது குறைந்த கர்ப்பங்கள் தொடர்பாக 53 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன எனத் தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

இப்படிச் சிறுவர்களை துஷ்பிரயோகத்துக்கும் வன்முறைக்கும் உட்படுத்துபவர்கள் யார் என்று ஆய்வு செய்வோமானால் அது மேலும் கொடுமையாக இருப்பதைக் காணலாம்.

பெற்றோர்கள், உடன் பிறந்தவர்கள், நெருக்கமான உறவினர்கள், ஆசிரியர்கள், மத குருமார் என்று அந்தச் சிறுவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டிய வேலியே பயிரை மேயும் கொடூரம் அம்பலமாகும்.

இத்தகைய பயங்கரமான நிலைமை சிறுவரின் நல்வாழ்விற்கு மட்டுமல்ல, நாட்டின் எதிர்காலத்திற்கும் நீண்டகால அச்சுறுத்தலாகத் தொடரும். சமுதாயக் காவல் பொறுப்பில் உள்ளோர் விசேட கவனம் எடுத்து சமூகத்தைக் காப்பாற்ற காத்திரமான நடவடிக்கை எடுப்பது அவசியம்.




# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவரின் குறும்படம் வெளியீடு


யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள், கல்லூரி ஒளிப்படக் கலைக் கழகத்தினரின் இயக்கம் மற்றும் படப்பிடிப்பில் உருவான *‘THE WAY - Target Locked’* என்ற குறும்படம் கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை கல்லூரி சபாலிங்கம் அரங்கில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் இ.செந்தில்மாறன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைபீடத் தலைவருமான பேராசிரியர் பா.அகிலனும் சிறப்பு விருந்தினர்களாக ஈழத்து திரைப்பட இயக்குநர் ராஜ் சிவராஜ், காணொளி புகைப்படக் கலைஞர் ஏ.கே.கமல், இசையமைப்பாளர் பூ.மதீசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சமூக பொறுப்புணர்வுச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக, தற்கொலைகளைத் தடுக்கும் உளவளத் துணைக்கு உதவும் முகமாக மாணவர்களை நல்வழிப்படுத்தும் இந்த குறும் படத்தை முற்றுமுழுதாக யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் உருவாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# தொழு நோய் தினத்தை முன்னிட்டு வளத்தாப்பிட்டியில் நடமாடும் முகாம்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சர்வதேச தொழுநோய் தினத்தை முன்னிட்டு, நேற்று (27) திங்கட்கிழமை நடமாடும் மருத்துவ முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வு என்பன டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையில் வளத்தாப்பிட்டியில் நடைபெற்றன.

மாத்திரைகளை உட்கொள்ளும் பட்சத்தில் ஒரு வருடத்துக்குள் தொழுநோய் முற்றாகக் குணமாகிவிடும் என்று இதன்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் அதிக தொழுநோயாளர்கள் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலேயே இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிராந்திய தொற்று நோய் தடுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம். ஏ. சி. எம். பஸால், சம்மாந் துறை ஆதார வைத்தியசாலை தோல் நோய் பிரிவு வைத்தியர் டாக்டர். உனைசியா ஆகியோர் கலந்து கொண்டனர்.



நிகழ்வுகளுக்கு, அலையன்ஸ் அபிவிருத்தி நிதியம் அனுசரணை வழங்கியிருந்தது.

# வவுனியா கூட்டுறவுக் கல்லூரியை மீண்டும் இயங்க வைக்கவேண்டும்!

**இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கோரிக்கை**

வவுனியா பூந்தோட்டதில் உள்ள கூட்டுறவு பயிற்சி கல்லூரியைத் திறந்து வைத்து இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளவை வருமாறு,

வடக்குக் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராகிய எஸ்.வேலாயுதம் பிள்ளையின் ஏற்பாட்டில் அன்றைய ஆரம்ப மாகாணக் கூட்டுறவுத் திணைக் களத்தில் அலுவலர்களாகக் கடமையாற்றிய க.பஞ்சலிங்கம், எஸ்.சிவராஜா, சி.கோணேஸ்வரன் ஆகியோரின் பங்களிப்புடன் கூட்டுறவு பயிற்சி கல்லூரியானது திருகோணமலையில் 1989 ஆம் ஆண்டு 'டொக்கியாட்' வீதியில் அமைந்துள்ள ஒரு தனியார் இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுப் பயிற்சிக்க கல்லூரியின் முதலாவது அதிபராக எஸ்.கோபாலசிங்கம் கடமையாற்றியிருந்தார்.

அதன் பின்னர் 1990 மே மாதத்தில் கூட்டுறவு பயிற்சி கல்லூரியானது தனியார் இல்லத்திலிருந்து திருகோணமலை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகம் இயங்கும் சிறு கைத தொழில் திணைக்களத்தின் கட்டடத் துக்கு மாற்றப்பட்டு இயங்கி வந்தது.

1999 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வவுனியாவில் இந்தக் கல்லூரியை நிரந்தரமான கட்டடத்தில் நிறுவுவதற்கென காணி வவுனியா பூந்தோட்டத்தில் மாகாண சபையால் ஒதுக்கப்பட்டு கூட்டுறவு பயிற்சி கல்லூரி நிறுவப்பட்டு, 2001 இல் புதிய கட்டடம் வடக்குக் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஜீ.கிருஷ்ணமூர்த்தியால் உத்தியோக பூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

அதுபோலவே இந்தக் கல்லூரிக்கான ஆண்கள் விடுதி, அலுவலர்களுக்கான விடுதி ஆகியன 2004 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டன.

கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி என்பது வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் உள்ள கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியில் நடத்துவதற்கான ஒரே ஒரு பயற்சி கல்லூரியாகும். கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்வதற்குக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறிகள் அடிப்படை வசதிகளற்ற இடங்களில் நடத்தப்படுகின்றது. பூந்தோட்டத்தில் உள்ள கூட்டுறவு பயிற்சி கல்லூரியில் அனைத்து வசதிகளும் உள்ள போதும் அது பயன்பாடு இல்லாமல் உள்ளது.

கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர்கள், கூட்டுறவு பணியாளர்கள், மாணவர்கள் என்று பலதரப்பினருக்கு பயிற்சிகளை வழங்கிவந்த அந்த பயிற்சி கல்லூரியானது மாகாண சபை ஊடகக் கூட்டுறவு துறையிடம் வழங்குமாறு கடந்த காலங்களில் இடம்பெற்ற மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டங்களில் மக்கள் பிரதிநிதிகளாலும், பொது அமைப்புகளாலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தன.

ஆனாலும் இன்றுவரை அது நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது. இந்த புதிய ஆட்சிலாவது கூட்டுறவு பயிற்சி கல்லூரியானது முழுமையாக இயக்க வைக்க வடமாகாணசபையின் ஆளுநர் நடவடிக்கை வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் என்று இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.



# தேயிலை ஆராய்ச்சி நிலையத்தை பார்வையிட்ட பிரதி அமைச்சர்

**(பொகவந்தலாவ)**

பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் இரத்தினபுரி மாவட்டத்தில் கர பிஞ்ச, புனித ஜோகிம் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

அத்துடன் அங்கு நிலவுகின்ற குறை நிறைகளை நேரடியாக கேட்டறிந்து, அவற்றுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இயந்திர சாதனங்களையும் பார்வையிட்ட அமைச்சர், எதிர்காலத்தில் புதிய தொழில் நுட்பங்கள் மூலம் உலக போட்டி சந்தையில் இலங்கையின் தேயிலையை அதிகம் விரும்பத்தக்க நிலையை கொண்டு செல்ல முடியும் எனவும் இலங்கை மொத்த தேசிய உற்பத்தியில் தேயிலை உற்பத்தியில் ஒரு தன்னிறைவை அடைய வேண்டுமாயின் தாங்கள் புதிய வழிமுறைகளை மேற்கொள்ளவதன் மூலமே தேயிலை உற்பத்தியின் ஓர் நிலையான அன்னிய செலாவணியை ஈட்டிக் கொள்ள முடியும் எனவும் சுட்டி காட்டியிருந்தார்.

# வேலையற்ற பட்டதாரிகளுடன் கிழக்கு ஆளுநர் சந்திப்பு!

**(எஸ்.கீதபொன்கலன்)**

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகரவுக்கும் 2024 ஓகஸ்ட் மாதம் கிழக்கு மாகாண ஆசிரியர் போட்டிப் பரீட்சை எழுதி நேர்முப்பரீட்சைக்கு தோற்றிய வேலையற்ற பட்டதாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்று (27) நடைபெற்றது.

பட்டதாரிகள் பல கோரிக்கைகளின் அடிப்படையில் தங்கள் பிரச்சினைகளை முன்வைத்தனர். அவர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று, இந்த பரீட்சை பெறுபேறுகள் எதிர்கால ஆட்சேர்ப்புக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நிரந்தரத் தீர்வை தன்னால் வழங்க முடியாது என்றும், அவர்களின் கோரிக்கை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் ஆளுநர் பதிலளித்தார்.

இந்த நியமனங்களில் பல தரப்பினர் ஆர்வமாக இருப்பதால், அனைவருக்கும் நியாயமான முடிவு எடுக்கப்படும் என்றும் –



நேர்முகத் தேர்வை எதிர்கொண்டவர்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக மாகாண கல்விச் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளதால், அவர்களின் பிரச்சினைகளை அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் ஆளுநர் கூறினார்.







# சிறுகதை நூல் வெளியீடு

(விஜயரத்தினம் சரவணன்)

முல்லைக் கோணேஸின் சிறுகதை நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு, மத்திய கல்லூரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு சிறுகதை நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

முல்லைத்தீவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.பீதாம்பரம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வானது மங்கல விளக்கேற்றப்பட்டு, தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து நூல் வெளியிடப்பட்டது. அதனையடுத்து நூல் வெளியீட்டுரை, நூல் நயப்புரைகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் வடமாகாண கல்விஅமைச்சர் த.குருகுலராஜா, நிலஅளவையாளர் க.அழகேந்திரம், பாடசாலை அதிபர்களான நெவிற் ஜீவராசா, எம்.ஜெபநேசன், சி.அமிர்தநாதன், எழுத்தாளர் வினோஷா வரதராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.








# சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் நுவரெலியாவில் 'ஈகிள் ரவர்' திறந்து வைப்பு

(க.கிஷாந்தன்)

நுவரெலியாவில் உள்ள சாந்திபுர 'ஈகிள் ரவர்' உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் திறக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் கடல் மட்டத்திலிருந்து 6182 அடி உயரத்தில் அமைந்துள்ள இலங்கையின் மிக உயரமான கிராமமான சாந்திபுர கிராமத்தைச் சுற்றி இந்த கண்காணிப்புத் தளம் கட்டப்பட்டுள்ளது.

'ஈகிள் ரவர்' நேற்று முன்தினம் (26) வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில், விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.

சுற்றுலாத் துறையின் வளர்ச்சியின் மூலம் உள்ளூர் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்காக, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக இலங்கையை ஒரு முக்கிய மற்றும் கவர்ச்சிகரமான இடமாக மாற்றும் முதன்மை நோக்கத்துடன் 2024 ஜுலை 31ஆம் திகதி தொடங்கப்பட்ட இதன் கட்டுமானப் பணிகள், இலங்கை விமானப்படையின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டது.

இதற்கான நிதி பங்களிப்பை சுற்றுலா அபிவருத்தி அதிகார சபை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ஜனாதிபதி யாழ். வருகையை முன்னிட்டு வேலையற்ற பட்டதாரிகள் கவனவீர்ப்பு!

## நளை முதல் மூன்று தினங்களுக்கு நடத்த ஏற்பாடு

(எஸ். நிதர்ஷன்)

ஜனாதிபதியின் யாழ். வருகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் வேலையற்ற பட்டதாரிகள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர் என்று வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று (28) ஊடக சந்திப்பை மேற்கொண்டு இவ்வாறு கருத்து தெரிவித்த வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்க ஊடக பேச்சாளர் கி.டனிசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கைக்கு சரியான வகையில் இதுவரை எந்தவொரு தரப்பினரும் தீர்வைத் தரவில்லை.

வடக்கின் ஆளுநரிடமும் பல தடவைகள் கோரிக்கை முன்வைத்திருந்தும் அவரும் எம்மை கண்டு கொள்ளாதவராகவே இருந்து வருகின்றார்.

இந்த நிலையில் வேலையற்ற பட்டதாரிகள் ஆகிய நாம் நாளை (29) ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை எமது பிரச்சினைகளை வெளிக்கொணரும் வகையில் கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

எமது மூன்று நாள் போராட்டமானது நாளை (29) 'பசுமை தானம்' என்னும்




தொனிப்பொருளில் மரக்கன்று விநியோகித்தலுடன் யாழ். வீரசிங்கம் மண்டப முன்றலில் ஆரம்பிக்கப்பமாகவுள்ளது. 30 ஆம் திகதியன்று கலைத்தூது கலையரங்கில் இரத்த தான முகாம் நடைபெறவுள்ளது. இறுதி நாளான 31 ஆம் திகதியன்று ஜனாதிபதியின் யாழ். வருகையை முன்னிட்டு மாவட்ட செயலகம் முன்பாகப் பட்டதாரிகள் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு எமது நிலையை எடுத்துக் கூறும் வகையில் கவனவீர்ப்புப் போரட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

வடமாகாணம் தழுவிய ரீதியில் உள்ள பட்டதாரிகளின் சார்பில் ஒலிக்கும் குரலாக இது நடைபெறும். எமது இந்தப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்க அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.- என்றர்.

இதேநேரம் குறித்த சங்கத்தின் தலைவர் சசிதரன் கூறுகையில்,

வேலையற்ற பட்டதாரிகள் என்ற வகைக்குள் கலைத்துறையில் பட்டங்களை பெற்றவர்களே முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலைக்கு நாட்டின் கல்வி கட்டமைப்பே காரணமாக இருக்கின்றது.

இதேவேளை, நாட்டின் கல்வி திட்டத்தின் ஊடாக முறையான தகுதி திறனை நாம் கொண்டிருக்கின்றோம்.

எமக்கு வேலைவாய்ப்பு வழங்கபடவில்லை எனில் அதற்கு முழுப் பொறுப்பும் இந்த கல்வி திட்டத்தைக் கொண்டிருக்கக் கூடிய அரசே ஆகும்.

வடமாகாணத்தில் இன்று பல்வேறு பட்ட திணைக்களங்களில் வேலைவாய்ப்பு வெற்றிடம் காணப்படுகின்றது.

இலங்கை அரச கட்டமைப்பின் பட்டபடிப்பு மூலமே நாம் கல்வித் தகுதியைப் பெற்றுள்ளோம்.

அதற்கு உரிய தொழில் வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, அரசுக்கு அழுத்தம் கொடுக்கவே நாம் இவ்வாறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

இதேநேரம், ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு எமது நிலைப்பாடுகள் அடங்கிய கோரிக்கைக் கடிதம் ஒன்றினை வழங்கியுள்ளோம்.

இந்த அரசு உருவாகிச் சில மாதங்களே கடந்துள்ளன.

இந்த அரசாவது எமக்கான தீர்வைத் தரும் என நாம் எதிர்பார்த்தோம்.

அதுவும் ஏமாற்றமாகவே இருக்கின்றது.- என்றார்.





# அச்சங்குளம் கிராமத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பு

## ரவிகரன் எம்.பி. கிராமத்தின் குறைபாடுகள் தொடர்பில் ஆராய்வு

(விஜயரத்தினம் சரவணன்)

மன்னார் – நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அச்சங்குளம் கிராமத்தில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று (27) மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நடத்தினார்.

இந்தக் குறைகேள் சந்திப்பில் அச்சங்குளம் கிராமத்துக்கான பிரதானவீதி சீரமைப்புத் தொடர்பிலும், பொதுப் போக்குவரத்தை ஏற்படுத்துவது தொடர்பிலும், குடி தண்ணீர் பிரச்சினை தொடர்பிலும் அச்சங்குளம் கிராம மக்களால் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

அச்சங்குளம் கிராமத்துக்கான 1.5 கிலோ மீற்றர் தூரமான பிரதானவீதி மிகமேசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் இவ்வீதியைப் பயன்படுத்தும் அச்சங்குளம் கிராமமக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துவருவதாகவும் குறித்த வீதியைச் சீரமைத்துத் தருமாறும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதேபோல் அச்சங்குளம் கிராமத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மாலையில் வீட்டுக்கு வருவதற்கு உரிய பொதுப்போக்குவரத்துசேவை இன்மையால் பல்வேறு இடர்பாடுகளுக்கு மாணவர்கள் முகங்கொடுத்து வருவதாகவும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அத்தோடு அச்சங்குளம் கிராமத்தில் குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதிலும் தாம் பல்வேறு இடர்பாடுகளுக்கு முங் கொடுப்பதாகவும் அப்பகுதி மக்கள் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தனர்.

அதேவேளை பொது நோக்கு மண்டபத்தின் பாதுகாப்பின் நிமித்தம், சேதமடைந்துள்ள பொது நோக்கு மண்டப ஜன்னல் கதவுகளை சீர்செய்வது தொடர்பிலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் மக்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், மக்களால் முன்வைக்கப்பட்ட இந்தப் பிரச்சினைகளை எழுத்து மூலமாகத் தம்மிடம் கையளிக்குமாறும், மக்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் தாம் கவனம் செலுத்துவார் என்றும் தெரிவித்தார்.





# காரைதீவு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்!

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று (27) திங்கட்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அஷ்ரப் தாஹிர், க.கோடீஸ்வரன், எம்.எஸ். உதுமா லெப்பை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை பிரதேச செயலாளர் ஜி.அருணன் ஒழுங்கு செய்திருந்தார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேசத்திலுள்ள சகல திணைக்களங்களம் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் எதிர்கால அபிவிருத்திகள் தொடர்பாகவும் திணைக்களங்கள் வாரியாக தனித்தனியாக ஆராயப்பட்டு முடிவுகள் மெற்கொள்ளப்பட்டன.

அண்மைக் காலமாக முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அங்கு காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.





# கல்லடிப்பாலத்துக்கு அருகில் சுவாமி விபுலானந்தருக்குச் சிலை!

(பழுவூரான், வி.ரி.சகாதேவராஜா)

சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா சபையின் பூரண ஏற்பாட்டில் மட்டக்களப்பு கல்லடி புதிய பாலத்துக்கு முன்பாக அமையப் பெற்றிருக்கும் சுவாமி விவேகானந்த அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு எதிர்ப்புறமாக சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை அமைக்கப்படவுள்ளது.

இதனை நிறுவுவதற்கு மட்டக்களப்பு கல்லடி உப்போடை இராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீயின் முன்னிலையில் சுப வேளையில் நேற்றுதிங்கட்கிழமை (27) அடிக்கல் நடும் நிகழ்வு இடம் பெற்றது.

அடிகளாரின் சிலை தனி ஒரு கருங்கல்லால் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான பூரண ஏற்பாடு அனைத்தும் இந்தியாவில் மாமல்லபுரத்தில் திறமை வாய்ந்த தமிழ் நாட்டு சிற்பிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடிகளாரின் சிலை அமைப்புச் செயற்குழுவின் தலைவராக மட்டக்களப்பின் பிரபல வர்த்தகரான தேசபந்து செல்வராஜா செயற்படுகிறார்.

நூற்றாண்டு விழா தலைவர் கே. பாஸ்கரனின் தலைமையில், காயத்ரி பீட குருக்கள் சிவயோக செல்வன் சாம்பசிவம், தேசபந்து செல்வராசா, நூற்றாண்டு விழா



பொது சபைச் செயலாளர் ச. ஜெயராஜா , உதவி பொது செயலாளர் தி.சரவணபவன், இணை செயலாளர் சந்திரகுமார் ஆகியோர் அடிக்கல் நட்டனர்.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ. வாசுதேவன், மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் தனஞ்செயன் மற்றும் கனடா விபுலானந்த கலா மன்ற தலைவர் புருசோத்தமன், கலாமன்றச் செயலாளர் நித்தியானந்தன் ஆகியோரும் அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவன பிரதிநிதி கல்முனை விஜயம்!

( வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவன பிரதிநிதி எஸ்.முரளி கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் (26) விஜயம் செய்தார்.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் தலைமையிலான குழுவினர் அவரை வரவேற்று அவர்களின் அமைப்பால் முன்னெடுக்கப்படும் திட்டங்களைக் காண்பித்தார்.



பிரதிநிதி முரளி அவற்றை நேரில் மதிப்பாய்வு செய்தார். அவர்களால் வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் நீரிழிவு மையம், குழந்தைகள் விடுதி பூங்கா மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு, எலும்பியல் பிரிவுகளுக்கான உபகரணங்கள் என்பனவற்றின் உயிர்ப்பான இயக்கம் பற்றி திருப்தி தெரிவித்தார்.

விஜயத்தின் போது பயனாளிகள் மற்றும் நிர்வாக குழுவினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்த ஒத்துழைப்பு தற்போதுள்ள திட்டங்களில் மேலும் மேம்பாடுகளுக்கு வழிவகுக்கும் என்றும் எதிர்காலத்தில் சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்துடன் புதிய திட்டங்களைத் தொடங்க வழி வகுக்கும் என்று பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் இதன்போது நம்பிக்கை தெரிவித்தார்.





# நிந்தவூர் பாடசாலைகளின் அதிபர்கள் அஷ்ரப் தாஹிர் எம்.பியுடன் சந்திப்பு!

(எம். எப். றிபாஸ்)

நிந்தவூர் பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிரை சந்தித்து பல்வேறு விடயங்களை தொடர்பில் கலந்துரையாடினர்.

நிந்தவூர் மஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையில் கடந்த திங்கள் கிழமை (27) இடம்பெற்ற இந்த நிகழ்வில் புதிய கல்வியாண்டின் சவால்கள் குறித்தும், பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் வளப்பற்றாக்குறைகள் சம்பந்தமாகவும் விரிவாக ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.



# ட்ரம்புடன் மோடி ஆலோசனை; தொலைபேசியில் வாழ்த்தினார்

அமெரிக்க ஜனாதிபதியாக 2 ஆவது முறை பதவியேற்றுள்ள ட்ரம்புக்கு பிரதமர் மோடி தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தார். அப்போது, இரு தலைவர்களும் முக்கிய ஆலோசனை நடத்தினர்.

கடந்த 2017 முதல் 2021 வரை அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவி வகித்தார். அப்போது அவருக்கும் இந்திய பிரதமர் மோடிக்கும் நெருங்கிய நட்புறவு நீடித்தது. சர்வதேச அரங்கில் ஒருமித்து செயல்பட்டனர். கடந்த 20 ஆம் திகதி ட்ரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக பதவி யேற்றார். இந்த விழாவில் இந்தியா சார்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் பங்கேற்றார்.

தற்போதைய நிலையில் ஜனாதிபதி ட்ரம்பின் மிக நெருங்கிய நட்பு வட்டாரத்தில் நரேந்திர மோடி (இந்தியா),



பெஞ்சமின் நெதன்யாகு (இஸ்ரேல்), ஜார்ஜியா மெலோனி (இத்தாலி), விக்டர் ஓர்பன் (ஹங்கேரி), சேவியர் மிலே (அர்ஜென்டினா) ஆகிய 5 பிரதமர்கள் இருக்கின்றனர் என அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சூழலில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், பிரதமர் மோடியும் தொலைபேசியில் நேற்று முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது பாதுகாப்பு, விண்வெளி, தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இணைந்து பணியாற்றுவது குறித்து ஆலோசித்துள்ளனர்

இதுகுறித்து சமூக வலைதள பதிவில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில், "எனது நண்பரும், அமெரிக்க ஜனாதிபதியுமான ட்ரம்புடன் தொலைபேசியில் பேசினேன். 2 ஆவது முறை ஜனாதிபதியாக பதவியேற்றதற்கு வாழ்த்து தெரிவித்தேன். இருநாடுகள் இடையே நம்பிக்கையான உறவு நீடிக்கிறது. இந்த உறவை வலுப்படுத்தவும், இரு தரப்புக்கும் பலன் அளிக்கும் வகையில் ஆக்கப்பூர்வமாக செயல்படவும் உறுதி மேற்கொண்டோம்.

இரு நாட்டு மக்களின் நலனுக்காக பாடுபடுவோம். உலக அமைதி, வளம். பாதுகாப்புக்காக இணைந்து பணியாற்றுவோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# திரிவேணி சங்கமத்தில் நீராடினார் அமித் ஷா

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் கடந்த 13 ஆம் திகதி மகா கும்பமேளா வெகு விமரிசையாக தொடங்கியது. நாள்தோறும் லட்சக்கணக்கான பக்தர்கள் இங்குள்ள திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

இந்நிலையில் கும்பமேளாவில் பங்கேற்க மத்திய அமைச்சர் அமித் ஷா நேற்று தனது குடும்பத்துடன் பிரயாக்ராஜ் சென்றிருந்தார். பிறகு அராலி காட் பகுதிக்கு படகு சவாரி செய்தார். அவருடன் உத்தர பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத், துணை முதல்வர்கள் கே.பி.மவுரியா, பிரஜேஷ் பதக் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

இதையடுத்து திரிவேணி சங்கமத்தில் அமித் ஷா புனித நீராடினார். முதல்வர் யோகி ஆதித்யநாத், பாபா ராம்தேவ் உள்ளிட்ட பல துறவிகள் அவருடன் புனித நீராடினர்.



# சனாதன தர்மம் தொடர்பான கருத்து: உதயநிதிக்கு எதிரான வழக்குகள் தள்ளுபடி

சனாதன தர்மம் தொடர்பான உதயநிதி ஸ்டாலினின் கருத்து, அரசமைப்பு சட்டத்தின் அடிப்படை உரிமைகள் எதையும் மீறவில்லை என நீதிபதிகள் தெரிவித்ததையடுத்து அவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் திரும்ப பெறப்பட்டன. இதையடுத்து, மனுக்களை தள்ளுபடி செய்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையில் கடந்த 2023 ஆம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் நடத்திய சனாதன எதிர்ப்பு மாநாட்டில் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று பேசினார். இதில் அவர் சனாதனம் குறித்து தெரிவித்த கருத்து சர்ச்சைக்குள்ளானது.

இதையடுத்து உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக வழக்கறிஞர் பி.ஜெகந்நாத் உள்ளிட்டோர் 3 வழக்குகளை



உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்தனர். அதில், சனாதன தர்மம் தொடர்பான உதயநிதியின் பேச்சு அரசமைப்பு சாசனத்துக்கு எதிரானது என அறிவிக்க வேண்டும் என்றும், இதற்காக உதயநிதி மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க தமிழக டி.ஜி.பிக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பீலா எம்.திரிவேதி, பிரசன்னா பி.வரலே ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில் மூத்த வழக்கறிஞர் தாமா சேஷாத்ரி நாயுடு, தமிழக அரசு தரப்பில் மூத்த வழக்கறிஞர் முகுல் ரோஹத்கி, உதயநிதி ஸ்டாலின் தரப்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், உதயநிதி ஸ்டாலினின் சனாதனம் குறித்த கருத்து, அரசமைப்பு சட்டத்தின் அடிப்படை உரிமைகள் எதையும் மீறவில்லை. எனவே இந்த மனுக்கள் விசாரணைக்கு உகந்தது அல்ல என்பதால் தள்ளுபடி செய்யப்போகிறோம் என்றனர்.

அதையடுத்து இந்த வழக்குகளை திரும்பப் பெறுவதாக மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதையேற்ற நீதிபதிகள் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிரான வழக்குகளை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

# ட்ரம்ப் மீதான விசாரணை மேற்கொண்ட சட்டத்தரணிகள் குழு பணி நீக்கம்!



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் அவருக்கு எதிரான இரண்டு குற்றவியல் வழக்குகளில் பணியாற்றிய பத்துக்கும் மேற்பட்ட நீதித்துறை சட்டத தரணிகளை பணிநீக்கம் செய்துள்ளது.

பதவி நீக்கமானது நேற்று திங்கள் கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ளது.

ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடுப்பதில் இவர்கள் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருப்பதால், ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலை நம்பிக்கைத் தன்மையாக செயல்படுத்துவதை நம்ப முடியாது என்று தீர்மானம் எடுக்கப்பட்டதை அடுத்து சட்டத்தரணிகள் பணிநீக்கம் செய்யப்பட்டதாக செயல் சட்டமா அதிபர் ஜேம்ஸ் மெக்ஹென்றி சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டத்தரணிகள் முன்னாள் சிறப்பு ஆலோசகர் ஜாக் ஸ்மித்தின் குழுவின் ஒரு பகுதியாக இருந்தனர்.

இந்தக் குழு ட்ரம்பின் இரகசிய ஆவணங்களை தவறாகக் கையாண்டதுடன், 2020 தேர்தல் தோல்வியை முறியடிக்க அவர் செய்ததாகக் கூறப்படும் முயற்சி மீதான விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

ட்ரம்ப் மீதான இரண்டு நீதித்துறை வழக்குகளை மேற்பார்வையிட ஜாக் ஸ்மித் 2022 இல் சிறப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில், ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்ற இரண்டு வினாடிகளுக்குள் அவரை பதவி நீக்கம் செய்வதாக ஜனாதிபதி சபதம் செய்திருந்தார்.

எனினும், ஜனவரி 20 ஆம் திகதி ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்பதற்கு முன்பே ஜாக் ஸ்மித் பதவி விலகினார்.

இரண்டு வழக்குகளும் ட்ரம்ப் மீது குற்றவியல் குற்றச்சாட்டுகளை விளைவித்தன.

எனினும், 2024 நவம்பர் தேர்தலில் அவர் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து வழக்குகள் முடக்கப்பட்டன.

நீதித்துறை விதிமுறைகளின் படி, ஒரு பதவியில் இருக்கும் ஜனாதிபதியை வழக்குத் தொடர அனுமதிக்காது என்று சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

எவ்வாறெனினும் ஸ்மித்தின் குழுவிலிருந்து பதவி நீக்கப்பட்டவர்கள் யார் என்பது உடனடியாகத் தெரியவில்லை.



# க்ரூஸ் வகை ஏவுகணையை சோதனை செய்த வடகொரியா

அமெரிக்க – தென்கொரியா கூட்டு இராணுவ பயிற்சியை அதிகரிப்பதற்கு பதிலடி கொடுக்கும்வகையில்வடகொரியா க்ரூஸ் வகை ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

வடகொரியாவுக்கும், தென்கொரியாவுக்கும் இடையே எல்லை பிரச்சனை உள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோ பைடன் தென் கொரியாவுக்கு தொடர்ந்து உதவிகளை வழங்கி வந்தார்.

இதன் காரணமாக ஜோபைடன் காலத்தில் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் அமெரிக்கா மீது கடுமையான நிலைப்பாட்டில் இருந்துள்ளார்.

எவ்வாறாயினும், தற்போது இரண்டாவது முறையாக அமெரிக்காவில் டொனால் ட்ரம்ப் பதவியேற்றுள்ள நிலையில், அமெரிக்காவுடனான மோதல் தணியும் என எதிர்பார்க்கப்பட்டது.

அத்தோடு, ட்ரம்பிற்கும் வடகொரிய ஜனாதிபதி கிம் இற்கும் இடையில் முன்பிருந்தே நல்ல உறவு பேணப்பட்டு வந்துள்ளது.

எனினும், தென்கொரியாவுடன் சேர்ந்து வடகொரியா எல்லையில் அமெரிக்கா போர் பயிற்சியை தொடங்கி உள்ள நிலையில், கிம் ஜாங் உன் ஆத்திரமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவால் தங்களுக்கு பிரச்சனை ஏற்படலாம் என்பதால் இராணுவம், ஆயுதம் மற்றும் ஏவுகணை கட்டமைப்புகளை பலப்படுத்தி வருவதன் ஒரு பகுதியாக வடகொரியா குரூஸ் வகை ஏவுகணையை ஏவி சோதனை செய்துள்ளது.

இந்த ஏவுகணை சோதனையை தொடர்ந்து கிம் ஜாங் உன், மிகவும் சக்தி வாய்ந்ததாக இராணுவத்தை மாற்ற வேண்டும் என்றும் போர் திறன் பயிற்சிகளை அதிகரிக்க வேண்டும். இது நாட்டின் பாதுகாப்பு காரணங்களுக்காக மேற்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதன்படி, இந்த செயல் என்பது அதிபராக டொனால்ட் ட்ரம்ப் இருந்தாலும் அமெரிக்காவுடன் மோதலுக்கு தயார் என்பதை காட்டும் வகையில் உள்ளதாக சர்வதேச மட்டத்தில் பேசப்பட்டு வருகிறது.

பக்கங்கள் 02

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 28.01.2025

## கனடாவில் வீட்டு வாடகை குறைவடையும் சாத்தியம்

கனடாவில் வீட்டு வாடகை குறைவடையும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன என குறிப்பிடப்பட்டுள்ளது.

கனடாவில் வாடகை வீட்டில் வசிப்பவர்களுக்கு மகிழ்ச்சி 02



# கனடா குறித்த ட்ரம்பின் கருத்து தொடர்பில் பிரித்தானிய அரச குடும்பம் கருத்து வெளியிடாது


**கனடா தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட கருத்து குறித்து பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ஸ் இது வரையில் எவ்வித கருத்துகளையும் வெளியிட வில்லை.**

**கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாநிலமாக உள்வாங்க போவதாக ட்ரம்ப் அண்மையில் பரபரப்பு அறிவிப்பு வெளியிட்டு இருந்தார்.**

**இந்த அறிவிப்பை அவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் மீண்டும் வலியுறுத்தி இருந்தார்.**

இவ்வாறான ஒரு பின்னணியில் கனடாவின் அரச தலைவராக கருதப்படும் மூன்றாம் சால்ஸ் மன்னர் இந்த விவகாரம் தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் இதுவரையில் வெளியிட வில்லை.

மன்னரின் நேரடி பிரதிநிதியாக காணப்படும் ஆளுநர் நாயகம் மேரி சிமோனும் இந்த விவகாரம் தொடர்பில் எவ்வித கருத்துக்களையும் வெளியிட வில்லை. இதேவேளை, ட்ரம்பின் கருத்துக்கு பிரித்தானிய அரச குடும்பம் எவ் வித அறிவிப்பையும் வெளியிடாது என அறிவிக்கப்பட்டுள்ளது. ட்ரம்பின இந்த அறிவிப்பு குறித்து கனடிய அரசியல் தலைவர்கள் கடுமையான எதிர்ப்பையும் அதிருப்தியும் வெளியிட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பலத்த காற்று குறித்து கனடாவில் எச்சரிக்கை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் சில பகுதிகளில் பலத்த காற்று வீச கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இந்த எதிர்வு கூறலை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக ஒன்றாரியோ மாகாணத்தின் தென்பகுதியில் இவ்வாறு பலத்த காற்று வீசும் என தெரிவிக்கப்படுகிறது.

மணிக்கு 70 கிலோ மீற்றர் முதல் 90 கிலோ மீற்றர் வரை வேகத்தில் காற்று வீசும் என தெரிவிக்கப்படுகிறது.

மரங்கள் முறிந்து விழக்கூடும் எனவும் மின்சாரம் தடைப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இது தொடர்பான எச்சரிக்கையை விடுத்துள்ளது.



# கட்சி தலைமைப் பதவிக்கு போட்டியிட சந்தரா ஆர்யாவுக்கு அனுமதி மறுப்பு

கட்சித் தலைமை பதவிக்காக போட்டியிட முடியாது என கட்சி தமக்கு அறிவித்ததாக லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்தரா ஆர்யா தெரிவித்துள்ளார்.

லிபரல் கட்சியின் தலைவர் பதவி வகித்து வந்த பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

இதனை தொடர்ந்து அந்த பதவி வெற்றிடத்திற்கு கட்சியின் பல உறுப்பினர்கள் போட்டியிடுவதாக அறிவித்திருந்தனர்.

ஒட்டாவா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரா ஆர்யா தலைமைத்துவ பதவிக்காக போட்டியிடப் போகின்றோம் என அறிவித்திருந்தார். எனினும் கட்சி நிர்வாகம் தம்மை தலைமைத்துவ பதவியில் போட்டியிட முடியாது என அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சமூக ஊடகங்களின் வாயிலாக அவர் இந்த விடயத்தை ஆரம்பித்துள்ளார்.

எனினும் அதிகாரப்பூர்வமாக இந்த விடயம் கட்சி இன்னும் அறிவிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

என்ன காரணத்திற்காக கட்சித் தலைமை பதவிக்கு போட்டியிட அனுமதி மறுக்கப்பட்டது என்பது குறித்த தகவல்களை அவர் வெளியிடவில்லை.

கடந்த இரண்டு வாரங்களாக தமது முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி பாராட்டுவதாக அவர் தனது சமூக ஊடக கணக்குகளில் தெரிவித்துள்ளார்.

# கனடாவில் அவசரமாக தரையிறக்கப்பட்ட விமானம்



கனடாவில் விமானம் ஒன்று அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

எயார் பிரான்ஸ் விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான விமானம் ஒன்று இவ்வாறு கனடாவின் விண்ணிப்பிக் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

விண்ணிப்பிக்கில் அமைந்துள்ள ரிச்சர்ட்சன் சர்வதேச விமான நிலையத்தில் ஏர் பிரான்ஸ் விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வானத்தில் திடீரென ஏற்பட்ட புகை மணம் காரணமாக விமானம் அவசரமாக திசை திருப்பப் பட்டு தரையிறக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், அவசர தரையிறக்கம் மேற்கொள்ளப்படவில்லை எதுவும் இந்த சம்பவத்தில் காயமடையவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யான அறிவிப்பொன்றை அந்நாட்டின் முன்னணி வீட்டுமனை இணையதளமான ரெண்டல்ஸ். சிஏ வெளியிட்டுள்ளது.

கனடாவில் கொரோனாத் தொற்று தீவிரமடைந்திருந்த காலத்தில் வாடகை வீடுகளில் வசிப்பவர்களிடம் அறிவிடப்படும் பணம் வெகுவாக அதிகரிக்கத் தொடங்கியிருந்தது.

குறிப்பாக கடந்த 2021 ஆம் ஆண்டு வரையில் 4.6 வீதமாக அதிகரிக்கப்பட்டிருந்த வாடகைத் தொகை 2022 ஆம் ஆண்டில் 12.1 வீதமாக அதிகரித்திருந்ததோடு, 2023 ஆம் ஆண்டில் 8.6 வீதத்தினால் அதிகரித்திருந்தது. இதனால் வாடகை வீட்டில் வசிக்கும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் ரெண்டல்ஸ் .சிஏ இணையத்தளமானது இவ்வாண்டு வாடகைத் தொகைகள் குறைவடையும் சாத்தியக்




கூறுகள் காணப்படுகின்றன எனவும் அதிகளவான வாடகை வீடுகள் தற்போது சந்தையில் காணப்படுகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.